குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், காங்கேயம்

முன்னிலை:– செல்வி.D. தேன்மொழி, பி.ஏ.,பி.எல்., எல்எல்.எம்.,

குற்றவியல் நீதித்துறை நடுவர், காங்கேயம்

2026 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 14 ம் நாள் வெள்ளிக்கிழமை

CC –290/2023

(CNR No.TNTI150014412023)

| Statement as per Rule 106 of the Criminal Rules of Practice, 2019 | | |
|---|---|---|
| 1. | வழக்கு எண். | C.C.No: 290 of 2023 |
| 2. | காவல் நிலையத்தின் பெயர் மற்றும் குற்ற எண். (Name of the Police Station and Crime Number) | அரசுக்காக காவல் ஆய்வாளர்,<br>ஊதியூர் காவல் நிலையம்,<br>(குற்ற எண். 161/2022)<br>... புகார்தாரர் |
| 3. | எதிரியின் பெயர் (Name of the Accused) | சசி ஆனந்த் (21/2022)<br>த/பெ. ஜெயபால்<br>7/24, ஸ்ரீரங்கன்கவுண்டம் பாளையம்,<br>துடுப்பதி,<br>பெருந்துறை தாலூகா,<br>ஈரோடு மாவட்டம்.<br>... எதிரி |
| 4. | எதிரியின் தந்தை பெயர் (Father's Name) | |
| 5. | எதிரியின் தொழில் (Occupation) | |
| 6. | எதிரியின் முகவரி (Residence) | |
| 7. | எதிரியின் வயது (Age) | |
| 8. | குற்ற நிகழ்வு நாள் (Date of occurrence) | 02.12.2022 |
| 9. | புகார் தேதி (Date of complaint) | 02.12.2022 |
| 10. | எதிரி கைது செய்யப்பட்ட நாள் (Date of Arrest) | 06.12.2022 |
| 11. | எதிரி பிணையில் விடுவிக்கப்பட்ட நாள் (Date of Release on Bail by Police) | 06.12.2022 |
| 12. | Date of Commitment | Not Applicable |
| 13. | விசாரணை ஆரம்பிக்கப்பட்ட தேதி (Date of commencement of Trial) | 08.03.2024 |
| 14. | விசாரணை முடிக்கப்பட்ட தேதி | 27.07.2026 |



D THENMOZHI

Digitally signed by D THENMOZHI
Date: 2026.08.14 19:32:46 +0530

| | | |
|---|---|---|
| | (Closure of Trial) | |
| 15. | தண்டனை அல்லது உத்தரவு (Sentence or order) | எதிரியின் மீதான இ.த.ச பிரிவு 279, 338, 304(A) குற்றச்சாட்டுகள் **அரசு தரப்பில் சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு நிரூபிக்கப்படாததால்** எதிரி மேற்படி பிரிவின் கீழ் குற்றவாளி அல்ல எனத் தீர்மானித்து எதிரியை **கு.வி.மு.ச. பிரிவு 255(1)ன் படி விடுதலை** செய்து தீர்ப்பளிக்கப்படுகிறது. (ii) எதிரி ஏற்கனவே இந்நீதிமன்றத்திற்கு வழங்கியிருந்த பிணைமுறி பத்திரத்தை மேல்முறையீட்டு காலத்திற்கு பின் ரத்து செய்து உத்தரவிடப்படுகிறது. |
| 16. | தீர்ப்பின் நகல் வழங்குதல் அல்லது குற்றம் சாட்டப்பட்டவர் குறித்த முடிவு (Service of copy of judgment or finding on accused) | Yes. Copy of the Judgment uploaded on the CIS and made available on E-courts portal |
| 17. | கால தாமதத்திற்கான காரணம் (Explanation of delay) | No such inordinate delay |

இம்மனுவானது இறுதியாக 27.07.2026ம் தேதியன்று விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டு, குற்ற முறையிடுபவர்/புகார்தாரர் தரப்பில் வழக்கறிஞர் அரசு குற்ற உதவி வழக்கறிஞர் நிலை 1 காங்கேயம் அவர்கள் முன்னிலையாகியும், எதிரி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.L.பிரபாகரன்.,B.A.,B.L., அவர்கள் முன்னிலையாகியும், இதுநாள் வரையில் நிலுவையில் இருந்து வந்த வழக்கின் ஆவணங்கள், சாட்சியங்களை பரிசீலனை செய்த பின்பு இருதரப்பு வாதங்களையும் கேட்டு இந்த வழக்கில் இன்று இந்நீதிமன்றம் வழங்கிடும்

## தீர்ப்புரை

இந்த வழக்கில் எதிரியின் மீது சட்டப்பிரிவு 279, 338, 304(A) இ.த.ச–ன் கீழ் குற்றம் முறையிடப்பட்டுள்ளது.

## 1. குற்ற இறுதி அறிக்கையின் சுருக்கம்

**1.1)** இவ்வழக்கில் கடந்த 02.12.2022 ம் தேதி காலை 05.00 மணியளவில் தாராபுரம் – காங்கேயம் ரோட்டில், நொச்சிபாளையம், செந்தில் பவர் பரோமோட்டார்ஸ் அருகில், இவ்வழக்கின் சாட்சி 1 ஹரிஹரன் என்பவர் TN 56 Q 3102 Bajaj Pulsar என்ற இருசக்கர வாகனத்தை ஓட்டிக்கொண்டும், பின் சீட்டில் பார்த்திபன் என்பவரை உட்கார வைத்துக்கொண்டும் தெற்கிலிருந்து வடக்காக வந்துள்ளார். அப்போது இக்குற்ற அறிக்கையில் கண்ட எதிரி சசி ஆனந்த் என்பவர் TN 47 AP 0614 Mahindra Bolero Pickup என்ற வாகனத்தை அதே ரோட்டில் வடக்கிலிருந்து தெற்காக, வேகமாகவும் கவனக்குறைவாகவும், மனித உயிருக்கும் உடமைக்கும் பங்கம் விளைவிக்கும் வகையில் ஓட்டிச் சென்று, ஹரிஹரன் மற்றும் பார்த்திபன் ஆகியோர் வந்த இருசக்கர வாகனத்தின் மீது மோதி விபத்தை ஏற்படுத்தியுள்ளார். இதனால் ஹரிஹரன் என்பவருக்கு தலை மற்றும் வலது முழங்கை ஆகிய இடங்களில் கொடுங்காயங்கள் (Grievous Injuries) ஏற்படுத்தி, பார்த்திபன் என்பவருக்கு மரணம் ஏற்பட காரணமாக இருந்துள்ளார். எனவே, எதிரி சசி ஆனந்த் என்பவர் மீது இதச பிரிவுகள் 279, 338 மற்றும் 304(A) ஆகியவற்றின் கீழ் குற்றம் புரிந்துள்ளதாக கூறி ஊதியூர் காவல் ஆய்வாளர் அவர்களால் குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

1.2) இவ்வழக்கு இந்நீதிமன்ற கோப்புக்கு எடுக்கப்பட்டு எதிரி அழைப்பாணையின் பேரில் நீதிமன்றத்தில் முன்னிலையானவுடன் கு.வி.மு.ச. பிரிவு 207–ன் படி எதிரிக்கு வழக்கு ஆவணங்கள் அனைத்தும் 01.03.2024 அன்று இலவசமாக வழங்கி போதிய அவகாசம் கொடுத்து வழக்கு ஆவணங்களை பரிசீலனை செய்து பார்த்ததில் எதிரி மீது குற்றச்சாட்டு வனைய போதிய முகாந்தரம் இருப்பதாக தோன்றியதால் 08.03.2024 அன்று எதிரியின் மீது இதச பிரிவுகள் 279, 338, 304(A)ன் கீழ் குற்றச்சாட்டுகள் வனைந்து விளக்கி வினவியபோது எதிரி குற்றத்தை மறுத்துள்ளார்.



D THENMOZHI

Digitally signed by D THENMOZHI
Date: 2026.08.14 19:32:56 +0530

**3. அரசு தரப்பு சாட்சியங்களின் சாட்சியத்திலிருந்து தெரியவரும் வழக்கின் சுருக்கம்:**

3.1) **அ.சா.1 திரு. ஹரிஹரன்** என்பவர் சம்பவத்தில் தான் பாதிக்கப்பட்டது குறித்தும், சம்பவத்தை பற்றி புகார் அளித்தது குறித்து சாட்சியம் அளிப்பதாக அரசு தரப்பு சாட்சியாக சேர்க்கப்பட்டு விசாரிக்கப்பட்டுள்ளார்.

3.2) **அ.சா.2 திரு. கார்த்திக்கேயன்** என்பவர் சம்பவத்தை நேரில் பார்த்தது குறித்து சாட்சியம் அளிப்பதாக அரசு தரப்பு சாட்சியாக சேர்க்கப்பட்டு விசாரிக்கப்பட்டுள்ளார்.

3.3) **அ.சா.3 திரு. ஜெயராமணி** என்பவர் சம்பவத்தை கேள்விப்பட்டது குறித்து சாட்சியம் அளிப்பதாக அரசு தரப்பு சாட்சியாக சேர்க்கப்பட்டு விசாரிக்கப்பட்டுள்ளார்.

3.4) **அ.சா.4 திரு. ரவிக்குமார்** என்பவர் பார்வை மகஜரில் கையெப்பம் செய்தது குறித்து சாட்சியம் அளிப்பதாக அரசு தரப்பு சாட்சியாக சேர்க்கப்பட்டு விசாரிக்கப்பட்டுள்ளார்.

3.5) **அ.சா.5 திரு. காமராஜ்** என்பவர் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டது குறித்தும், புலன் விசாரணை செய்யப்பட்டு எதிரி மீது குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்தது குறித்தும் சாட்சியம் அளித்துள்ளார்.

அரசு தரப்பில் அ.சா.1 மற்றும் அ.சா.5 வரையிலான சாட்சிகள் விசாரணை செய்யப்பட்டு அ.சா.ஆ.1 முதல் அ.சா.ஆ.11 வரையிலான சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளன. அரசு தரப்பில் சான்றுப்பொருட்கள் எதுவும் குறியீடு செய்யப்படவில்லை.

**4. கு . வி . மு . ச பிரிவு 313(1)( b ) ன் படி வினவுதல்:**

4.1) அரசு தரப்பு சாட்சிகளின் சாட்சியங்களில் இவ்வழக்கின் எதிரிக்கு பாதகமான விபரங்கள் குறித்து எடுத்துக் கூறி குவிமுச பிரிவு 313(1)(b)ன் கீழ் 27.07.2026 அன்று



D THENMOZHI Digitally signed by D THENMOZHI Date: 2026.08.14 19:33:00 +0530

வினவியபோது எதிரி அரசு தரப்பு சாட்சியங்களை பொய் சாட்சியம் என்றும், மேலும் அவர்களது தரப்பில் விசாரிக்க சாட்சியங்கள் இல்லை என்றும் கூறினார். எனவே எதிரி தரப்பு சாட்சியம் முடிக்கப்பட்டுள்ளது.

5. தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சனை

***இவ்வழக்கில் இனி காண வேண்டிய தீர்வு யாதெனில், அரசு தரப்பில் எதிரியின் மீதான இதச பிரிவு 279, 338, 304(A)–ன் கீழான குற்றச்சாட்டுகள் சாட்சியங்கள் மற்றும் சான்றாவணங்கள் வாயிலாக சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபிக்கப்பட்டுள்ளதா? என்பதேயாகும்.***

6. தீர்வு

6.1) இரு தரப்பு வாதங்கள் கேட்கப்பட்டது. வழக்காவணங்கள் பரிசீலனை செய்யப்பட்டது. இந்திய தண்டனை சட்டம் பிரிவு 279, 338, 304(A)–ன் கீழ் குற்றம் நிரூபணம் செய்யப்பட எதிரி தனது அஜாக்கிரதை அல்லது கவனக்குறைவான செயலை செய்வதன் மூலம் யாரேனும் ஒருவருக்கு கொலைக்கு நிகராகாத மரணத்தை ஏற்படுத்தியிருக்க வேண்டும்.

6.2) இந்த வழக்கில் அரசு தரப்பு முதலாவதாக, விபத்து ஏற்படுத்திய வண்டி அடையாளப்படுத்தலும், இரண்டாவதாக விபத்து ஏற்படுத்திய வண்டியை எதிரிதான் அஜாக்கிரதை அல்லது கவனக்குறைவாக ஓட்டினார் என்றும், மூன்றாவதாக எதிரி வாகனத்தை அவ்வாறு ஓட்டி கொலைக்கு நிகராகாத மரணத்தை ஏற்படுத்தியுள்ளார் என்றும் அரசு தரப்பில் நிரூபிக்க வேண்டும்.

6.3) எதிரி தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர் இந்த வழக்கு விபத்து சம்பவத்திற்குரிய வாகனத்தை எதிரிதான் ஓட்டினார் என்பது அரசு தரப்பில் நிரூபணம் செய்யப்படவில்லை என்றும், விபத்தானது எதிரியால் நடைபெறவில்லை என்றும் இழப்பீடு பெறுவதற்காக இந்த வழக்கு தவறதலாக எதிரியின் மீது பதிவு


D THENMOZHI
Digitally signed by D THENMOZHI
Date: 2026.08.14 19:33:05 +0530

செய்யப்பட்டுள்ளது என்றும், எதிரி மீதான குற்றம் அரசு தரப்பில் சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு நிரூபிக்கப்படவில்லை என்று எதிரியை விடுதலை செய்யக்கோரினார்.

6.4) இவ்வழக்கில் அரசு தரப்பில் காயமடைந்த நேரடி சாட்சியாக அ.சா.1 ஹரிஹரன் விசாரிக்கப்பட்டுள்ளார். அவரது சாட்சியத்தில், 02.12.2022 அன்று காலை சுமார் 05.30 மணியளவில், தாராபுரம் – காங்கேயம் சாலையில் நொச்சிபாளையம் அருகே, தனது நண்பர் பார்த்திபனுடன் வேலைக்குச் செல்வதற்காக தனது Pulsar இருசக்கர வாகனத்தில் சென்று கொண்டிருந்தபோது, எதிரே வந்த Mahindra Bolero Pickup வாகனம் தங்களது இருசக்கர வாகனத்தின் மீது மோதியதால் விபத்து ஏற்பட்டதாகவும், அந்த விபத்தில் தனக்கு உடலில் பலத்த காயம் ஏற்பட்டு சம்பவ இடத்திலேயே மயக்கமடைந்ததாகவும், பின்னர் ஆம்புலன்ஸ் மூலம் முதலில் தாராபுரம் வேல் மருத்துவமனைக்கும், அதன்பின் மேல்சிகிச்சைக்காக கோவையிலுள்ள KMCH மருத்துவமனைக்கும் அழைத்துச் செல்லப்பட்டதாகவும் சாட்சியம் அளித்துள்ளார். மேலும், தன்னுடன் பயணித்த பார்த்திபன் தாராபுரம் அரசு மருத்துவமனையில் சிகிச்சை பலனின்றி உயிரிழந்ததை பின்னர் அறிந்ததாகவும், இதுதொடர்பாக காவல்துறையில் புகார் அளித்ததாகவும் தெரிவித்துள்ளார். அதனை உறுதிப்படுத்தும் வகையில், (அ.சா.ஆ.1) புகார் அளிக்கப்பட்டுள்ளது தெரியவருகிறது. மேலும், இவ்வழக்கில் பாதிக்கப்பட்ட சாட்சியான அ.சா.1 தனது முதல் விசாரணை மற்றும் குறுக்கு விசாரணையை, ஒப்பிட்டு பரிசீலனை செய்து ஆராய்கையில் வாகனம் மோதி விபத்து ஏற்பட்டது என்பதில் மாற்றம் இல்லை. ஆனால் அந்த விபத்தில் எதிரி தான் அஜாக்கிரதையாகவும், கவனக்குறைவாகவும், தகாத துணிச்சலுடன் வாகனத்தை ஓட்டி வந்து விபத்தை ஏற்படுத்தினார் என்பதை காணுதல் வேண்டும் இது தொடர்பாக காணும் போது அ.சா.1 அவரது சாட்சியத்தில் இந்த விபத்திற்கு எதிரி தான் முழுக்காரணம் என்பதும் மேற்படி அஜாக்கிரதை மற்றும் கவனக்குறைவால் தான் விபத்தானது நிகழ்ந்து அதில் பார்த்திபன் என்பவர் இறந்தார் என்பதை குறிப்பிட்டு சாட்சியம் அளிக்காததது அரசு தரப்பு வழக்கிற்கு பெரும் பாதகம் ஏற்படுத்தும் வகையில் அமைந்துள்ளதாக இந்நீதிமன்றம் கருதுகிறது.



D THENMOZHI
Digitally signed by D THENMOZHI
Date: 2026.08.14 19:33:10 +0530

6.5) இவ்வழக்கில் அரசு தரப்பில் அ.சா.2 கார்த்திகேயன் என்பவர் கண்ணுற்ற சாட்சியாக விசாரிக்கப்பட்டுள்ளார். அவரது சாட்சியத்தில், 02.12.2022 அன்று காலை சுமார் 05.30 மணியளவில், தாராபுரம் – காங்கேயம் சாலையில் நொச்சிபாளையம் அருகே ஹரிஹரனும், பார்த்திபனும் பயணித்த இருசக்கர வாகனம் விபத்துக்குள்ளானது குறித்து பிரகாஷ் என்பவர் தொலைபேசி மூலம் தகவல் தெரிவித்ததாகவும், பின்னர் சம்பவ இடத்திற்குச் செல்லும் முன்பே காயமடைந்த ஹரிஹரன் தாராபுரம் வேல் மருத்துவமனைக்கும், அதன்பின் மேல்சிகிச்சைக்காக கோவையிலுள்ள KMCH மருத்துவமனைக்கும் அழைத்துச் செல்லப்பட்டதாகவும், பார்த்திபன் தாராபுரம் அரசு மருத்துவமனையில் சிகிச்சை பலனின்றி உயிரிழந்ததாக மருத்துவர்கள் தெரிவித்ததாகவும் சாட்சியம் அளித்துள்ளார். மேலும், விபத்து குறித்த தகவலை பார்த்திபனின் மனைவிக்கு தொலைபேசி மூலம் தெரிவித்ததாகவும் கூறியுள்ளார். மேலும், அ.சா.2 தனது குறுக்கு விசாரணையில், சம்பவ இடத்திற்கு விபத்து நடைபெற்ற பின்னர் மாலை நேரத்தில் தான் சென்றதாகவும், விபத்து எவ்வாறு நடைபெற்றது என்பதை நேரடியாகப் பார்க்கவில்லை என்பதையும் கூறியுள்ளார். அ.சா.2 சம்பவத்தை நேரில் பார்த்தவர் அல்ல என்பதும், அவரது சாட்சியம் பிறரிடமிருந்து கேட்டறிந்த தகவலின் அடிப்படையிலான கேள்விநிலைச் சாட்சியமாக உள்ளன என்பதையும் அறியமுடிகிறது.

6.6) மேலும், அரசு தரப்பில் கேள்விநிலை சாட்சியாக விசாரிக்கப்பட்டுள்ள அ.சா.3 ஜெயராம் இவ்வழக்கில் விபத்தில் இறந்த பார்த்திபனின் உறவினர் ஆவார். அவரது சாட்சியத்தில், 02.12.2022 அன்று காலை பார்த்திபனின் மனைவி தொலைபேசி மூலம் விபத்து குறித்த தகவலை தெரிவித்ததாகவும், பின்னர் மருத்துவமனைக்கு சென்று பார்த்தபோது பார்த்திபன் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துவிட்டதாக மருத்துவர்கள் தெரிவித்ததாகவும், மேலும் பிரேத விசாரணையின்போது உடனிருந்து பிரேதத்தை அடையாளம் காட்டி சாட்சிக் கையொப்பமிட்டதாகவும் சாட்சியம் அளித்துள்ளார். மேலும், அ.சா.3 தனது குறுக்கு விசாரணையில், விபத்து எவ்வாறு நடைபெற்றது என்பதை நேரடியாக பார்க்கவில்லை என்று கூறியுள்ளார். எனவே, அ.சா.3–ன் சாட்சியானது


D THENMOZHI
Digitally signed by D THENMOZHI
Date: 2026.08.14 19:33:16 +0530

மற்றொருவர் கூறக் கேட்டு அறிந்த மற்றும் சம்பவத்திற்குப் பிந்தைய நிகழ்வுகள் குறித்து மட்டுமே அமைந்துள்ள கேள்விநிலைச் சாட்சியாக (Hearsay Evidence) கருதத்தக்கது. மேலும், விபத்து எந்த விதத்தில் நடைபெற்றது என்பதையும் அவரது சாட்சியத்தின் மூலம் அரசு தரப்பு வெளிக்கொணரவில்லை என இந்நீதிமன்றம் கருதுகிறது.

6.7) மேலும் இவ்வழக்கில் பார்வை மகஜர் சாட்சியான அ.சா.4 ரவிக்குமார் அவரது முதல் விசாரணையில் கடந்த 02.12.2022ம் தேதி காலை 10.00 மணியளவில் போலீசார் விபத்து நடந்த இடத்தை பார்வையிட்டு பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்தார்கள் என்று சாட்சியம் அளித்துள்ளார்கள்.

6.8) இவ்வழக்கில் புலன் விசாரணை அதிகாரியாக அ.சா.5 காமராஜ் விசாரிக்கப்பட்டுள்ளார். அவரது சாட்சியத்தில், 02.12.2022 அன்று தாராபுரம் வேல் மருத்துவமனையிலிருந்து பெறப்பட்ட காயம் குறித்த தகவல் மற்றும் தாராபுரம் அரசு மருத்துவமனையிலிருந்து பெறப்பட்ட இறப்பு தகவலின் அடிப்படையில், காயமடைந்த ஹரிஹரனிடம் புகார் வாக்குமூலம் பெற்று, அதன் தன்மைக்கேற்ப ஊதியூர் காவல் நிலையக் குற்ற எண்.161/2022–ன் கீழ் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்து, அதன் அசலை நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்ததாகவும், பின்னர் சம்பவ இடத்தைப் பார்வையிட்டு பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயாரித்து, சாட்சிகளிடம் வாக்குமூலங்கள் பதிவு செய்ததாகவும் சாட்சியம் அளித்துள்ளார். மேலும், இறந்த பார்த்திபனின் பிரேத விசாரணை மேற்கொண்டு, பிரேத பரிசோதனைக்கு அனுப்பி வைத்ததுடன், சம்பந்தப்பட்ட மருத்துவர்கள், மோட்டார் வாகன ஆய்வாளர் மற்றும் இதர சாட்சிகளை விசாரித்து வாக்குமூலங்கள் பதிவு செய்ததாகவும், எதிரியை கைது செய்து நிலையப் பிணையில் விடுவித்ததாகவும், புலன் விசாரணை முடிவில் ஹரிஹரனுக்கு ஏற்பட்ட காயம் கொடுங்காயம் என்பது தெரியவந்ததால் சட்டப்பிரிவை 279, 337, 304(A) IPC–லிருந்து 279, 338, 304(A) IPC–ஆக மாற்றி, அதன் பின்னர் எதிரி மீது குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்ததாகவும் சாட்சியம் அளித்துள்ளார்.


D THENMOZHI
Digitally signed by D THENMOZHI
Date: 2026.08.14 19:33:22 +0530

6.9) மேலும் விபத்தில் இறந்துபோன பார்த்திபன் என்பவரது உடலை பிரேத பரிசோதனை செய்த அரசு மருத்துவமனை உதவி மருத்துவர் திரு.ஹரிஷ் இறந்துபோன பார்த்திபன் என்பவருக்கு பலத்த தலைக் காயம் எலும்பு முறிவு இரத்தக் கசிவு மற்றும் அதிர்ச்சி ஆகிய காரணங்களால் இறப்பு நேர்ந்துள்ளது என்று சான்று வழங்கியுள்ளார். மேற்படி அ.சா.ஆ.8 பிரேத பரிசோதனை சான்றிதழை பரிசீலிக்கும் போது விபத்தில் இறந்து போன நபருக்கு விபத்து சமயத்தில் காயங்கள் ஏற்பட்டது என்பதும் அந்த காயங்களால் தான் அவர் இறந்துள்ளார் என்பது நிரூபணம் செய்யப்பட்டுள்ளதாக இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

6.10) மேலும் இந்த வழக்கில் அரசு தரப்பில் குறியீடு செய்யப்பட்டுள்ள அ.சா.ஆ.6 மோட்டார் வாகன ஆய்வறிக்கையின் படி விபத்துக்கு வாகனத்தின் இயந்திரக்கோளாறுகள் ஏதும் காரணமில்லையெனவும் தெரிய வருகிறது. ஆனால் ஏற்கனவே கண்ட பரிசீலனைகளின் படி மேற்படி வாகனத்தை எதிரி தான் ஓட்டி வந்தார் என்று அரசு தரப்பில் நிரூபணம் செய்யப்படாததால் மேற்படி வாகனத்தில் உள்ள சேதத்தை மட்டும் எடுத்துக்கொண்டு இந்த வழக்கு சம்பவத்தில் எதிரி தான் ஈடுபட்டார் என கூற முடியாது.

6.11) அ.சா.1 முதல் அ.சா.4 வரையிலான அரசு தரப்பு சாட்சியங்கள் தகுந்த சாட்சியம் அளிக்காத நிலையில் இவ்வழக்கில் வழக்கு கோப்புகளை பார்வையிட்டு அதனடிப்படையில் கூடுதல் சாட்சியம் அளித்துள்ள காவல் ஆய்வாளர் திரு.காமராஜ் (அ.சா.5)ன் சாட்சியத்தை மட்டும் நிலைமுறை சாட்சியமாக எடுத்துக்கொள்ள முடியாது. மேற்படி அ.சா.5 ன் சாட்சியத்தை வைத்துக்கொண்டு, எதிரி மீதான வழக்கினை தீர்மானிப்பது நீதியின் நலனுக்கு உகந்ததாக இருக்காது என்றே இந்நீதிமன்றம் கருதுகின்றது. மேற்காண் சூழ்நிலைகளும், அ.சா.1ன் சாட்சியமும் எதிரி மீதான அரசு தரப்பு வழக்கின் மீது பெரும் சந்தேகத்தினை ஏற்படுத்துகின்றது.



D THENMOZHI
Digitally signed by D THENMOZHI
Date: 2026.08.14 19:33:27 +0530

6.12) இவ்வழக்கில் அ.சா.1 முதல் அ.சா.5 வரையிலான மொத்த சாட்சிகளின் சாட்சியத்தை ஒரு சேர பரிசீலனை செய்ததில் இவ்வழக்கு சம்பவ சமயத்தில் எதிரி தான் வாகனத்தை வேகமாகவும், அஜாக்கிதையாகவும், கவனக்குறைவாகவும் ஓட்டி வந்து இவ்விபத்தை ஏற்படுத்தி அதன் மூலம் பார்த்திபன் என்பவர் இறந்துள்ளதாக குறிப்பிட்டு சாட்சியம் அளிக்கவில்லை.

6.13) மேற்படி சாட்சியங்களை வைத்து அரசு தரப்பு வழக்கில் எதிரி மீது சுமத்தப்பட்டுள்ள குற்றங்கள் நிரூபிக்கப்பட்டுள்ளது என்று உறுதி செய்ய இயலாது. ஏனெனில் அ.சா.1 ஹரிஹரன் என்பவர் புகார்தாரர் சாட்சியாக உள்ளார். மேலும், இவ்வழக்கில் அ.சா.2 கண்ணுற்ற சாட்சியாக உள்ளார். இவ்வாறு இருக்கையில் அ.சா.1 மற்றும் அ.சா.2 ன் சாட்சியங்கள் இவ்வழக்கிற்கு மிகுந்த முக்கியத்துவம் வாய்ந்ததாக உள்ளது. ஆனால் மேலே விவரிக்கப்பட்டுள்ளவாறு அ.சா.1 மற்றும் அ.சா.2 ஆகியோர்கள் எதிரியின் குற்றங்களை நிரூபணம் செய்யும் வகையில் தெளிவாக எந்தவொரு சாட்சியமும் அளிக்கவில்லை. மேற்படி சாட்சிகள் வழக்கு சம்பவத்தன்று எதிரி தான் வாகனத்தை ஓட்டி வந்து விபத்தை ஏற்படுத்தினார் என்பது குறித்து சாட்சியம் அளிக்கவில்லை. எனவே அரசு தரப்பு வழக்கினை நிரூபணம் செய்யும் வகையில் சாட்சியம் அளித்திடாதது அரசுதரப்பிற்கு பாதகமாக அமைவதாக இந்நீதிமன்றம் கருதுகிறது.

6.14) மேற்படி பரிசீலனைகளின் அடிப்படையில் எதிரியின் மீதான இ.த.ச.பிரிவு 279, 338, 304(A) ன் கீழான குற்றச்சாட்டுகள் அரசுதரப்பில் சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு நிரூபணம் செய்யப்படவில்லை என இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

எனவே சந்தேகத்தின் பலனை எதிரிக்கு அளித்து அவரை விடுதலை செய்வது நீதியின்பால் உகந்தது என கருதி, அவ்வாறே தீர்மானித்து மேற்கண்ட பிரச்சினைக்கு தீர்வு காணப்படுகிறது.



D THENMOZHI

Digitally signed by D THENMOZHI
Date: 2026.08.14 19:33:32 +0530

**இறுதியாக,**

*(i) எதிரியின் மீதான இ.த.ச பிரிவு 279, 338, 304(A) ன் கீழான குற்றச்சாட்டு அரசு தரப்பில் சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு நிரூபிக்கப்படாததால் எதிரி மேற்படி பிரிவின் கீழ் குற்றவாளி அல்ல எனத் தீர்மானித்து எதிரியை கு.வி.மு.ச. பிரிவு 255(1)ன் படி விடுதலை செய்து தீர்ப்பளிக்கப்படுகிறது.*

*(ii) எதிரி ஏற்கனவே இந்நீதிமன்றத்திற்கு வழங்கியிருந்த பிணைமுறி பத்திரத்தை மேல்முறையீட்டு காலத்திற்குபின் ரத்து செய்து உத்தரவிடப்படுகிறது. இவ்வழக்கில் வழக்கு சொத்து எதுவும் தாக்கல் செய்யப்படவில்லை.*

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் சரிபார்க்கப்பட்டு, இன்று 2026 ம் ஆண்டு ஆகஸ்ட் திங்கள் 14 ம் நாள் திறந்த நீதிமன்றத்தில் வைத்து அவையறிய பகரப்பட்டது.

D THENMOZHI
Digitally signed by D THENMOZHI
Date: 2026.08.14 19:33:38 +0530

குற்றவியல் நீதித்துறை நடுவர்
காங்கேயம்.

**இணைப்பு:**

**அரசு தரப்பு சாட்சிகள் :**

| வரிசை எண் | சாட்சிகளின் பெயர்கள் | விளக்கம் | முதல் விசாரணை தேதி | குறுக்கு விசாரணை தேதி |
|---|---|---|---|---|
| அ.சா.1 | திரு. ஹரிஹரன் | புகார்தாரர் சாட்சி | 22.06.2026 | 22.06.2026 |
| அ.சா.2 | திரு. கார்த்திகேயன் | கண்ணுற்ற சாட்சி | 22.06.2026 | 22.06.2026 |
| அ.சா.3 | திரு. ஜெயராம் | கேள்விநிலை சாட்சி | 22.06.2026 | 22.06.2026 |
| அ.சா.4 | திரு.ரவிக்குமார் | பார்வை மகஜர் சாட்சி | 17.07.2026 | 17.07.2026 |

| | | | | |
|---|---|---|---|---|
| அ.சா.5 | திரு.காமராஜ் | புலன் விசாரணை அதிகாரி | 17.07.2026 | 17.07.2026 |

**<u>அரசு தரப்பு சான்றாவணங்கள்</u>** :

| வரிசை எண் | சான்றாவணங்கள் | சாட்சிகள் |
|---|---|---|
| அ.சா.ஆ.1 | புகார் | அ.சா.1 |
| அ.சா.ஆ.2 | பார்வை மகஜர் | அ.சா.4 |
| அ.சா.ஆ.3 | முதல் தகவலறிக்கை | அ.சா.5 |
| அ.சா.ஆ.4 | மாதிரி வரைபடம் | அ.சா.6 |
| அ.சா.ஆ.5 | பிரேத விசாரணை அறிக்கை | அ.சா.6 |
| அ.சா.ஆ.6 | மோட்டார் வாகன ஆய்வறிக்கை (TN 47 AP 0614) | அ.சா.6 |
| அ.சா.ஆ.7 | மோட்டார் வாகன ஆய்வறிக்கை (TN 56 Q 3102) | அ.சா.6 |
| அ.சா.ஆ.8 | பிரேத பரிசோதனை சான்று | அ.சா.6 |
| அ.சா.ஆ.9 | விபத்து பதிவேடு (ஹரிஹரன்) | அ.சா.6 |
| அ.சா.ஆ.10 | விபத்து பதிவேடு (ஹரிஹரன்) | அ.சா.6 |
| அ.சா.ஆ.11 | சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கை | அ.சா.6 |

**<u>அரசு தரப்பு சான்றுபொருட்கள்</u>**

இல்லை.

**<u>எதிரி தரப்பு சாட்சிகள், எதிரி தரப்பு சான்றாவணங்கள், எதிரி தரப்பு சான்று பொருள்கள்:–</u>**

இல்லை.

D THENMOZHI

Digitally signed by D THENMOZHI
Date: 2026.08.14 19:33:43 +0530

குற்றவியல் நீதித்துறை நடுவர்,
காங்கேயம்.

**குறிப்பு:**

1. வழக்கு விசாரணை காலத்தில் எதிரி பிணையில் இருந்து வந்துள்ளார்.
2. எந்தவொரு சாட்சியும் 3 தினங்களுக்கு மேல் நிறுத்தி வைக்கப்படவில்லை.
3. முடிவாக, எதிரி வழக்கில் இருந்து விடுதலை செய்யப்பட்டார்.
4. வழக்கின் முடிவு காவல்துறைக்கு தெரிவிக்கப்பட்டது.
5. தீர்ப்புரை நகல் கனம் முதன்மை நீதித்துறை நடுவர் திருப்பூர் அவர்களுக்கு பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது.



D THENMOZHI

Digitally signed by D THENMOZHI
Date: 2026.08.14 19:33:50 +0530